தலைவர

39

**நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை : திரு.க.கோபால கிருஷ்ணன், B.E.,**

**ந.க.எண்.824/2020/திவம2**

**நாள்.08.07.2020.**

பொருள்: மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் - திருவள்ளூர் மண்டலம் - திருவள்ளூர் மாவட்டம் - திருவள்ளூர் வட்டம் - செவ்வாப்பேட்டை ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண்.80-ல் 2.12 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - சம்பந்தமாக.

பார்வை:
1. செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர்(பொ), திருமழிசை துணைக்கோள் நகரக் கோட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை-56 அவர்களின் கடித எண்.தி.து.ந.கோ/சர்வே/2419-A/08, நாள்.19.03.2020.
2. அரசாணை (Ms) எண்.71, ஊரக வளர்ச்சித் துறை, நாள்.16.06.2003.
3. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண். 14619/1988/பிசிசி, நாள்.27.04.1988.
4. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண். 40483/1990/எல்ஏ1, நாள்.07.11.1992.
5. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண். 16985/2000/எல்ஏ2, நாள்.29.09.2007.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.7978/2012/எல்ஏ2, நாள்.19.04.2012.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.12544/2014/சிபி, நாள்.04.07.2014.
8. இவ்வலுவலகக் கடிதம், இதே எண், நாள்.05.06.2020 (சாலைகள் மற்றும் பூங்கா ஒப்படைக்க கோரியது).
9. தலைமையலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நிகழ்ச்சிப் பதிவு நாள்.03.08.2012.
10. செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர்(பொ), திருமழிசை துணைக்கோள் நகரக் கோட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை-52 அவர்களின் கடிதம் நாள்.02.06.2020 (பரிசீலனைக் கட்டணம் செலுத்தியது) மற்றும் 06.07.2020. (நன்னிலை வரி செலுத்தியது)
11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017.

*****

**உத்தரவு :**

1. திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், செவ்வாப்பேட்டை ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்.80-ல் 2.12 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரைபட ஒப்புதலுக்கு, பார்வை 1-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, கீழ்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

2. இம்மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ.உ.இ (திவம).எண்.61/2020** என எண்ணிடப்பட்டு, இரண்டு தொகுப்புகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3. பார்வை 10-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி ரூ.14,700/- (ரூபாய் பதிநான்காயிரத்து ஏழுநூறு மட்டும்), பரிசீலனைக் கட்டணம் ரூ.13,000/- (ரூபாய் பதிமூன்றாயிரம் மட்டும்) ஆகியவை செலுத்தப்பட்டதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது

4. மேலும், பார்வை 3, 4, 5 மற்றும் 6-ல் சுட்டிய, நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடிதங்களில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. பார்வை 2-ல் சுட்டியுள்ள அரசாணையின்படி சாலைகளை மனுதாரரிடமிருந்து தானப் பத்திரம் மூலம் பெற்றும், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் வடிகால் வசதிகளை செய்து மனைப்பிரிவு முழுமையாக அபிவிருத்தி செய்து அதனை உள்ளாட்சிக்கு ஒப்படைத்த பின்னரும், மேலும், மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும், இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை 19(இ), 19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6. மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)-ன்படி இவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms No.71 RDLA dated:16.06.2003 and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.

8. ஊராட்சி மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலைகள் இடத்தினை தனி புல உட்பிரிவு பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

9. உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள் உள்ளாட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா? என்பதை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய பொறியாளர், வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்த தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

10. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள் :</u>

1. பார்வை 6, 7-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர். சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/2014/சிபி. நாள்.04.07.2014 சிறப்பு நிபந்தனையில் "நகர் ஊரமைப்புத் துறை சட்டப் பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

2. பார்வை 11-ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி, உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3. பார்வை 9-ல் கண்ட கூட்டப்பதிவின் படி, மனைப்பிரிவின் உத்தேச சாலைகள், சாலை விஸ்தரிப்புகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்டும் பூங்கா, உள்ளாட்சிக்குரிய பகுதி, சாலைகள், சாலை விஸ்தரிப்புகள் ஆகியன உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டும் மின்வாரியத்திற்குரிய பகுதி மின்வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்

8/7/2020

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
திருவள்ளூர் மண்டலம்.

8/7/2020

<u>இணைப்பு :</u>
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் (2 நகல்கள்).

<u>பெறுநர் :</u>
தலைவர் / நிர்வாக அலுவலர்,
செவ்வாப்பேட்டை ஊராட்சி,
திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம்,
திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

<u>நகல் :</u>
1 செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர்(பொ),
திருமழிசை துணைக்கோள் நகரக் கோட்டம்,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,
எண்.792, டி.கே.எஸ்.பி.எம். டவர்ஸ்,
பூவிருந்தவல்லி, சென்னை-600 056.

2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை-02,
அவர்களுக்கு மனைப்பிரிவு வரைபடம் மற்றும்
மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம்.
மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

43

**ஊராட்சி மன்ற தலைவர் செவ்வாப்பேட்டை ஊராட்சி அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திருமதி.அ.டெய்சிராணி**

**ந.க.எண்: 01/2021/ஊ** **நாள்: 06. 05.2021**

**பொருள்** : மனைபிரிவு ஒப்புதல் அனுமதி – திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம் - செவ்வாப்பேட்டை ஊராட்சி – தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (TNHB)-ல் - சர்வே எண் 80-ல் - 47 வீட்டு மனைகள் - பரப்பளவு 2.12 ஏக்கரில் – மனைப்பிரிவினை வரன்முறைபடுத்தி மனைபிரிவிற்கு ஒப்புதல் அனுமதி அளித்து உத்தரவிடல் - சாரந்து.

**பார்வை** :

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் அவர்களின் கடித ந.க.எண். 820/2020/திவம2 நாள்: 08.07.2020.
2. செவ்வாப்பேட்டை ஊராட்சி மன்றம் தீர்மான எண் (ம) நாள்: 79./8/2/2020

* * * * *

உத்தரவு

பார்வையில் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம், அவர்களின் கடித ந.க.எண் 820/2020/திவம2 நாள்: 08.07.2020 திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த செவ்வாப்பேட்டை ஊராட்சி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (TNHB)-ல் சர்வே எண் 80-ல் 47 வீட்டு மனைகள் பரப்பளவு 2.12 ஏக்கரில் கொண்ட மனைப்பிரிவினை வரன்முறைபடுத்தி மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அனுமதி அளித்து அரசு விதிகளின்படி வரன்முறைபடுத்தும் வகையில் அரசுக்கு செலுத்த வேண்டிய உரிய தொகை அரசு மற்றும் உள்ளாட்சி நிதி தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி 47 மனைகளுக்கு அனுமதி அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. மனையின் ஊடே Tower Line செல்லக் கூடாது.
2. மனையின் ஊடே அரசு புறம்போக்கு ஏதும் அமையக் கூடாது.
3. மனையின் ஊடே நீர்நிலைகள் ஏதும் செல்லக் கூடாது.
4. மனை உரிமம் குறித்து ஆவணங்கள் சரியானவை இல்லை என அறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.
5. இம்மனை பொதுபாதையாக அமையக்கூடாது.
6. மனைப்பிரிவில் சாலைகளின் இருபுறங்களிலும் முறையாக கழிவுநீர் கால்வாய் அமைக்கப்பட்டு இருக்க வேண்டும். மேலும் கழிவுநீர் கால்வாய் அமைக்கப்பட்ட பின்னர் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் தேவைப்படும் பட்சத்தில் முறையாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து அனைத்து மனைகளும் விற்கப்பட்டு முடிக்கப்படும் வரை கழிவுநீர் கால்வாய் முழுமையாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் பராமரிப்பு செய்யப்பட வேண்டும்.

மேற்காணும் நிபந்தனைகளில் குறைபாடுகள் ஏதேனும் கண்டறியப்பட்டால் தங்களது மனைபிரிவு அனுமதி இரத்து செய்யப்படும்.

ஊராட்சி மன்ற தலைவர்
செவ்வாப்பேட்டை ஊராட்சி

**தலைவர் / செயல் அலுவலர்**
**செவ்வாப்பேட்டை ஊராட்சி**
**திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம்.**

பெறுநர்:
செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் (பொ),
திருமழிசை துணைக்கோள் நகர கோட்டம்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.